# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மூன்றாம் தவணைப் பரீட்சை – 2025**

| **குடியியற் கல்வி I,II** | **பெயர்/ சுட்டெண் :- ……………………………** | **நேரம்:- 3.10 மணித்தியாலம்** |
|---|---|---|

கவனிக்க
- எல்லா வினாக்களுக்கும் விடை தருக
- 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது மிகப் **பொருத்தமான** விடையைத் தெரிவு செய்க

**மேலதிக வாசிப்பு நேரம்: 10 நிமிடங்கள்**
வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தை பயன்படுத்திக் கொள்க

## குடியியற் கல்வி – I

01 மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்ற ஆட்சிமுறையை உலகிற்கு அறிமுகம் செய்த நாடு

(1) பிரித்தானியா (2) பிரான்ஸ் (3) ஐக்கிய அமெரிக்கா (4) இலங்கை

02 பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தில் மக்கள் ஒற்றுமையுடன் செயற்படுவதற்கு பின்பற்றக்கூடிய வழிமுறை

(1) தமது இனத்தின் பாதுகாப்பை வலுப்படுத்தல்.
(2) எல்லோரினதும் கலாசாரத்தை மதித்து நடத்தல்.
(3) தமது சமய வழிபாட்டு முறைகளை இறுக்கமாக கடைப்பிடித்தல்.
(4) எல்லோரினதும் சமய நிகழ்வுகளுக்கு சென்று அதனை கடைப்பிடித்தல்.

03 பின்வருவனவற்றில் ஒற்றையாட்சியின் பண்பாக ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயம்

(1) மத்திய அரசும் பிராந்திய அரசும் காணப்படும்.
(2) அரசியல் யாப்புக்கு விளக்கமளிக்கும் அதிகாரம் உயர் நீதிமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டிருத்தல்.
(3) மத்திய அரசுக்குரிய நிர்வாக விடயங்களை இலகுபடுத்துவதற்கு சில அதிகாரங்களை பிராந்திய நிர்வாக அலகிடம் ஒப்படைத்தல்.
(4) மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் உரிய அதிகாரங்கள் அரசியல் யாப்பில் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

04 மாகாணசபைகளின் அதிகாரங்களில் 1ஆம் நிரலில் உள்ளடங்கிய விடயமாக அமைவது

(1) வெளிவிவகார நடவடிக்கை (2) குடியரவு, குடியகல்வு மற்றும் குடியுரிமை
(3) விவசாயமும் கமநலசேவையும் (4) பொருளாதாரத் திட்டமிடல்

05 நீதித்துறைக்குரிய சட்டவரைவுகளைப் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்தல், சமாதான நீதிவான்களை நியமனம் செய்தல் போன்ற அதிகாரங்களுடன் தொடர்புடையவர்

(1) சட்டமா அதிபர் (2) பிரதம நீதியரசர் (3) நீதி அமைச்சர் (4) ஜனாதிபதி

06 சந்தைப் பொருளாதார முறையில் குறிப்பான **குறைபாடாகக்** குறிப்பிடப்படுவது

(1) உள்நாட்டு முதலீட்டாளர்களை கவனிக்காமை.
(2) சுற்றாடல் மாசுபடுதல் தொடர்பாக கவனம் செலுத்தாமை.
(3) தனியார் துறை முதலீடுகள் ஊக்குவிக்கப்படாமை.
(4) மானியங்களுக்கு விலைக்கட்டுப்பாடுகள் விதிக்கப்படல்.

07 வரையறுக்கப்பட்ட வாக்குரிமை, சர்வஜன வாக்குரிமை என்பவற்றை அறிமுகம் செய்த யாப்புச் சீர்திருத்தங்கள் **முறையே**

(1) மக்கலம் சீர்திருத்தம், டொனமூர் சீர்திருத்தம் (2) சோல்பரி சீர்திருத்தம், மனிங் சீர்திருத்தம்
(3) டொனமூர் சீர்திருத்தம், சோல்பரி சீர்திருத்தம் (4) மக்கலம் சீர்திருத்தம், சோல்பரி சீர்திருத்தம்

08 மோதல் தீர்வுக்காகப் பயன்படுத்தும் ஆரம்ப அடிப்படை முறையாக அமைவது

(1) பேரம் பேசுதல் (2) பேச்சுவார்த்தை (3) இணக்கப்பாடு (4) கலந்துரையாடல்

09 பின்வருவன மனித உரிமைகள் சிலவாகும்

A தொழிற்சங்கத்தில் சேர்ந்து கொள்வதற்கான உரிமை B வாக்களிக்கும் உரிமை

C அரசியலில் பங்கேற்கும் உரிமை D கல்வியைப் பெற்றுக்கொள்ளும் உரிமை

E தொழில் செய்யும் உரிமை F வேலைக்கேற்ற ஊதியம் பெறும் உரிமை

மேலே தரப்பட்ட உரிமைகளில் பொருளாதார உரிமைகள் **மட்டும்** அடங்கிய விடை

(1) BCD (2) AEF (3) ABD (4) BCE

10 அரசின் அல்லது பொதுமக்களின் விருப்பத்தை கொள்கைகளாக மாற்றுதல் மற்றும் அவற்றை செயலுருப்படுத்தும் நிறுவனம்

(1) அரசாங்கம் (2) அரசியல் கட்சிகள் (3) அரசு (4) நீதித்துறை

11 வளங்களின் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக உலகில் கைக்கொள்ளப்படும் வழிமுறைகளில் GP என்பதன் விரிவாக்கம்

(1) முழுமைத்தர முகாமைத்துவம் (2) தூய்மையான உற்பத்திகள்
(3) பசுமை உற்பத்திகள் (4) தவறுகளைப் பூச்சியமாக்குதல்

12 மத்திய அரசின் அதிகாரங்களை அரசியல் யாப்பின் மூலம் பிராந்திய அரசுகளுக்கு பகிர்ந்தளித்தல் எவ்வாறான ஆட்சி முறையாகும்.

(1) ஒற்றையாட்சி (2) மன்னராட்சி (3) சனாதிபதி ஆட்சி (4) சமஷ்டி ஆட்சி

13 பிராந்திய அமைப்புக்கள் உருவாவதற்கு அடிப்படையாக அமைந்த முக்கிய நோக்கங்கள் இரண்டைத் தெரிவு செய்க.

1 யுத்தம் சார்ந்த நோக்கங்கள், வர்த்தக நோக்கங்கள்

2 பாதுகாப்பு நோக்கங்கள், ஒத்துழைப்பு நோக்கங்கள்

3 யுத்தம் சார்ந்த நோக்கங்கள், பொருளாதார நோக்கங்கள்

4 பொருளாதார நோக்கங்கள், ஜனநாயக நோக்கங்கள்

14 இலங்கையில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பணிகளில் பொதுப்பயன்பாட்டுச் சேவையினுள் உள்ளடங்கும் பணியாவது

(1) வடிகால்களை அமைத்தலும் திருத்துதலும்

(2) உள்வீதிகளை அமைத்தலும் பராமரித்தலும்

(3) பொது மலசலகூடங்களை அமைத்தலும் பரிபாலித்தலும்

(4) பொதுக்குளியல் இடங்களைப் பராமரித்தல்

15 பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தில் நல்லாட்சியைச் செயற்படுத்துவதன் மூலம் அடையக்கூடிய அனுகூலம்

(1) சமய கலாசார நிகழ்வுகளுக்கு பாதிப்பு ஏற்படும்.
(2) இனங்களுக்கிடையே நம்பிக்கையைக் கட்டியெழுப்ப முடியும்.
(3) ஒழிவு மறைவின்றி வெளிப்படைத் தன்மையுடன் செயற்படுவதில் தாமதம் ஏற்படும்.
(4) சட்டதிட்டங்களை கட்டாயத்தின் பேரில் கடைப்பிடித்தல்.

16 தேசிய அரசு பலமடைவதற்கு காரணமான அரசியல் சிந்தனையாளர்

(1) ஜீன்போடின் (2) ஏ.வீ.டைசி (3) கலாநிதி.கே.சீ.வியர் (4) T.B டெய்லர்

17 அபிவிருத்தி அடைந்து வரும் நாடான இலங்கையின் சிறப்பியல்புகளுள் ஒன்று

(1) தொழில்நுட்ப அறிவு விருத்தியடைந்திருத்தல்.

(2) உயர்வான எழுத்தறிவு மட்டம் காணப்படல்.

(3) சிசுமரணவீதமும், ஆயுள் எதிர்பார்ப்பும் உயர்வாக இருத்தல்.

(4) வெளிநாடுகளில் அதிக முதலீடுகள் காணப்படுதல்.

18 ஆதிவாசிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஆதிவாசிகள் மற்றும் பழங்குடி மக்கள் சங்கத்தினை உருவாக்கிய அமைப்பு

(1) ஐக்கிய நாடுகள் சபை (2) உலக சுகாதார அமையம்

(3) உலக சுற்றாடல் கழகம் (4) உலகத் தொழிலாளர் அமையம்

19 நிலம் மற்றும் முயற்சி ஆகிய இரு உற்பத்திக் காரணிகளுக்கான கொடுப்பனவாக அமைவது **முறையே**

(1) வட்டி, வாடகை (2) வாடகை, கூலி (3) வாடகை, இலாபம் (4) வட்டி, சம்பளம்

20 சர்வதேச வர்த்தகத்தின் இரு பிரிவுகளும் முறையே

(1) உள்நாட்டு வியாபாரம், வெளிநாட்டு வியாபாரம்

(2) இருபக்க வியாபாரம், பல பக்க வியாபாரம்

(3) ஏற்றுமதி வியாபாரம், இறக்குமதி வியாபாரம்

(4) இருபக்க வியாபாரம், ஒரு பக்க வியாபாரம்

21 மோதல் தீர்வு தொடர்பாக தனிநபர் ஒருவரிடம் காணப்பட வேண்டிய சமூகப்பண்புகளைக் குறிக்கும் விடைத்தொகுதி

(1) தியாக சிந்தனை, செவிமடுத்தல் (2) கருணை, செவிமடுத்தல்

(3) புரிந்துணர்வு, கடமையைச் செய்தல் (4) பிறரை மதித்தல், பொறுமை

22 இலங்கையில் சுற்றாடல் தொடர்பாக செயற்படும் நிறுவனம் **அல்லாதது**

(1) சுற்றாடல் அமைச்சு (2) வனப்பாதுகாப்புத் திணைக்களம்

(2) வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களம் (4) சர்வதேச சுற்றாடல் சபை

23 தேர்தல் ஒன்றில் பிரசைகளின் கடமைகள் தொடர்பான கூற்றுக்களில் **அடங்காதது**

(1) தேர்தல் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்படல்

(2) அரசியற் கட்சி ஒன்றினை அமைத்தல்.

(3) தேர்தல் சட்டங்களை நடைமுறைப்படுத்த உதவுதல்

(4) தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடல்

24 தற்காலத்தில் நீதிமன்றங்களுக்கு செல்லாமலேயே பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண ஏற்படுத்தப்பட்ட அமைப்பு

(1) ஓம்புட்ஸ்மன் (2) கிராமசபை (3) இணக்கசபை (4) காதி நீதிமன்றம்

25 இலங்கையில் அதிகாரப்பங்கீடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பிரயத்தனங்களில் 1957இல் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம்

(1) ஜே.ஆர். ஜயவர்த்தன – ராஜீவ் ஒப்பந்தம் (2) டட்லி – செல்வா ஒப்பந்தம்

(3) பண்டா – செல்வா ஒப்பந்தம் (4) ஸ்ரீமா – சாஸ்த்திரி ஒப்பந்தம்

26. பிரித்தானியாவின் காலனித்துவ நாடுகளின் உறுப்பினர்களைக் கொண்டு 1944ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அமைப்பு

(1) சார்க் அமைப்பு (2) ஆசியான் (3) கொழும்புத் திட்டம் (4) பொதுநலவாய அமைப்பு

27 ‘‘முடிவுகள் மேற்கொள்வது தொடர்பில் சுதந்திரமாகச் செயற்படல்’’ இது நல்லாட்சியின் எவ்வகையான பண்பு

(1) அரசியல் பண்பு (2) பண்பாடு ரீதியான பண்பு

(3) பொருளாதாரப் பண்பு (4) சமூகப் பண்பு

28 எமது நாட்டில் கிராம சபைகள் மூலம் கிராம நிர்வாகம் மேற்கொள்ளப்பட்டமை பற்றிய தகவல்களை தனது குறிப்புக்களில் எழுதியுள்ள ஆங்கிலேய நாட்டவர்

(1) பிரெட்ரிக்நோர்த் (2) றொபட்நொக்ஸ் (3) எட்வேட் பாண்ஸ் (4) ஜோவாவோ ரிபைரோ

29 சனநாயக சமூகத்தின் வெற்றிக்கு ஊடகங்களால் நிறைவேற்ற வேண்டிய பொறுப்பாகக் கூறக்கூடியது.

(1) மக்கள்படும் கஷ்டங்களை எதிர்க்கட்சியின் கவனத்துக்கு கொண்டுவரல்.

(2) நடைமுறையில் உள்ள செய்திகளை உரிய நேரத்தில் மக்களுக்கு தெரியப்படுத்தல்.

(3) பக்கச்சார்பான தகவல்களை வழங்குதல்.

(4) ஆட்சியாளர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து செயற்படல்

30. ❈ வறுமை, பட்டினியை ஒழித்தல் ❈ அனர்த்தங்களில் சிக்கியோருக்கு உதவுதல்

❈ பொருளாதார சமூக அபிவிருத்தியை உறுதிப்படுத்தல்

மேற்குறித்த நோக்கங்களைக் கொண்டு செயற்படும் அமைப்பு

(1) WFP (2) WHO (3) ILO (4) IMF

31 உற்பத்தியின் போது செலவு ஏற்படுவதும், அவற்றை நுகர்வு செய்யும் போது விலை செலுத்த வேண்டியதுமான பொருட்கள் எவ்வாறு அழைக்கப்படும்

(1) நுகர்வுப் பொருட்கள் (2) பொருளாதாரப் பண்டங்கள்

(3) பொருளாதாரமல்லாப் பண்டங்கள் (4) இடைநிலைப் பொருட்கள்

32 சட்டத்தின் பிரதான குறிக்கோள்

(1) மக்கள் மத்தியில் சட்டம் தொடர்பான அறிவை வழங்குதல்.

(2) மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்.

(3) சட்டத்தை மதித்தலும் சட்டத்திற்கு கீழ்ப்படிவதனையும் உறுதி செய்தல்.

(4) மக்களின் வாழ்க்கை, உரிமைகள், சொத்துக்கள் ஆகியன பாதுகாக்கும் வகையில் மனித நடவடிக்கைகளை நிர்வகித்தல்.

33 ஜனநாயக ஆட்சிமுறையின் முக்கியத்துவமாக அமைவது

(1) பெரும்பான்மை இன மக்கள் ஆட்சியில் பங்குகொள்ளச் சந்தர்ப்பம் வழங்கல்.

(2) தனி மனித அபிவிருத்திக்கு முக்கியத்துவமளித்தல்.

(3) தனிநபர் இயலுமைக்கும் திறமைக்கும் கட்டுப்பாடு விதித்தல்.

(4) உரிமைகளை மட்டுப்படுத்தி வழங்குதல்.

34 A அபிவிருத்தி அடைந்த நாட்டில் தனிநபர் வருமானம் உயர்வாக உள்ளது.

B அபிவிருத்தி அடைந்த நாட்டில் சந்தைக்காக போட்டி போடும் நிலை உருவாகியுள்ளது.

C அபிவிருத்தி அடைந்த நாட்டில் கைத்தொழிலின் பங்களிப்பு வீதம் குறைவடைந்து செல்கின்றது.

மேலே தரப்பட்ட கூற்றுக்களின்படி அபிவிருத்தி அடைந்த நாட்டின் பண்பாக கொள்ளக்கூடிய தகவல்கள்

(1) A யும் B யும் உண்மை, C பொய்யானது (2) A யும் C யும் உண்மை, B பொய்யானது
(3) A உண்மை, B யும் C யும் பொய்யானது (4) A யும் B யும் C யும் உண்மையானது

35 "வேற்றுமைக்கு மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்துதல்" என்னும் பன்மைப் பண்பாட்டுத் தன்மையை இலக்காகக் கொண்டு செயற்படும் ஆசிய நாடு எது?

(1) பாகிஸ்தான் (2) தாய்லாந்து (3) வியட்நாம் (4) சிங்கப்பூர்

36 கீழேயுள்ள நிரல் I இல் ஆசியா கண்டத்தின் பிராந்தியங்களையும் நிரல் II இல் அவை உருவாக்கிய அமைப்புக்களையும் காட்டுகின்றது.

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1 தென்னாசிய வலய நாடுகள் | A பிம்ஸ்டெக் |
| 2 தென்கிழக்காசிய நாடுகள் | B கொழும்புத் திட்டம் |
| 3 தென், தென்மேல் ஆசிய நாடுகள் | C சார்க் |
| | D ஆசியான் |

நிரல் I இன் ஒழுங்குமுறை வரிசையில் நிரல் II இனை தொடர்புபடுத்தும் போது பெறப்படும் சரியான விடை

(1) CAD (2) CBD (3) CDB (4) BAC

37 ஜொஹான் கல்டுன் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்ட மோதல் முக்கோணம் எனும் மாதிரியில் உள்ளடங்கும் விடயங்களைக் கொண்ட தொகுதியாக அமைவது

1) நடத்தை, பங்குபற்றல், மனப்பாங்கு 2) நடத்தை, இணக்கப்பாடு, பங்குபற்றல்
3) நடத்தை, சூழ்நிலை, மனப்பாங்கு 4) சூழ்நிலை, இணக்கப்பாடு, பங்குபற்றல்

38 அடிப்படை மனித உரிமை என்பதன் மூலம் கருதப்படும் விடயம் யாதெனில்

(1) சனநாயக சமூகத்தில் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உரிமைகளாகும்.
(2) நாடு ஒன்றின் அரசியல் அமைப்பில் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்வாங்கப்பட்ட உரிமைகளாகும்.
(3) சர்வதேச ரீதியாக உடன்படிக்கைகள் மூலம் அங்கீகரிக்கப்பட்ட உரிமைகளாகும்.
(4) மனிதர்களுக்கு அத்தியவசியமாகக் கிடைக்கப்பெற வேண்டிய உரிமைகளாகும்.

39 மனித அபிவிருத்திச் சுட்டிகளின் நியதிகளில் ஒன்று கொள்வனவுச் சக்தியை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்பட்ட தனிநபர் மொத்த தேசிய உற்பத்தியாகும் ஏனைய இரண்டும்

(1) எழுத்தறிவு, பிரசவத்தாய் மரணம் (2) ஆயுள் எதிர்பார்ப்பு, பிரசவத்தாய் மரணம்
(3) எழுத்தறிவு, சிசுமரணவீதம் (4) எழுத்தறிவு, ஆயுள் எதிர்பார்ப்பு

40 A ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்து நாடுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தல்.

B அங்கத்துவம் பெறும் நாடுகளில் 5 நாடுகள் நிரந்தர உறுப்பு நாடுகளாக இருத்தல்.

C பதினைந்து நாடுகள் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்ளல்

D வருடத்திற்கு ஒருமுறை கூடுதல்

மேலே தரப்பட்ட கூற்றுக்களில் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச்சபையுடன் தொடர்புடைய கூற்றுக்கள்

(1) B யும் C யும் (2) A மட்டும் (3) A யும் B யும் (4) C யும் D யும்

(40x1= 40 புள்ளிகள்)

## பகுதி II

- முதலாம் வினா கட்டாயமானது.
- ஏனைய வினாக்களில் **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.
- எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும்.

1. (I) சர்வஜன வாக்குரிமையைப் பயன்படுத்துவதற்கு இலங்கை வாக்காளர் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக?

   (II) சுவிட்ஸர்லாந்தின் பிரதேச அலகான கென்ரன்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

   (III) மாகாணசபையொன்றின் முதலமைச்சர் உள்ளிட்ட அமைச்சரவையின் அதிகாரங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக?

   (IV) பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தில் கூட்டாகச் செயற்படுத்துவன் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய நன்மைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

   (V) உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் வகைக்கேற்ப அவற்றின் பிரிவுகள் **இரண்டினைக்** குறிப்பிடுக?

   (VI) மோதலின் பிரதான வகைகள் **இரண்டும்** எவை?

   (VII) சர்வதேச சட்டத்துடன் தொடர்புடைய சட்டப்பிரிவுகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

   (VIII) 1978ஆம் ஆண்டின் இரண்டாம் குடியரசு அரசியல் யாப்பின் படி பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படும் முறைகள் **இரண்டினையும்** குறிப்பிடுக?

   (IX) உரிமைகளை வென்றெடுப்பதற்காக பிரித்தானியாவில் இடம்பெற்ற முயற்சிகள் **இரண்டினைக்** குறிப்பிடுக?

   (X) தூதுவர் ஒருவர் கொண்டிருக்க வேண்டிய முக்கிய பண்புகள் **இரண்டு** தருக.

   (10×2=20 புள்ளிகள்)

2. (I) இலங்கையில் செயற்படும் மேல்நிலை நீதிமன்றங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.(2 புள்ளிகள்)

   (II) சட்டமா அதிபர் கொண்டுள்ள அதிகாரங்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

   (III) (A) தாமதமின்றியும் பக்கச்சார்பின்றியும் நீதி வழங்கப்பட வேண்டியதன் முக்கியத்துவங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக? (2 புள்ளிகள்)

   (B) மேலே (A) வினாவில் குறிப்பிட்ட முக்கியத்துவங்களுள் **ஒன்றினை** விளக்குக. (3 புள்ளிகள்)

3 (I) நாடுகள் இரண்டிற்கிடையில் அல்லது பலவற்றுக்கிடையே மோதல் ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் சமூக பொருளாதாரக் காரணிகள் **இரண்டு** தருக. (2 புள்ளிகள்)

   (II) மனதில் அமைதியை ஏற்படுத்திக் கொள்வதற்கான வழிகள் **மூன்று** தருக? (3 புள்ளிகள்)

   (III) (A) மோதலினை சமாதானமாகத் தீர்ப்பதனால் பெற்றுக்கொள்ளக்கூடிய நன்மைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக? (2 புள்ளிகள்)

   (B) மேலே (A) வினாவில் குறிப்பிட்ட நன்மைகளுள் ஒன்றினை விளக்குக. (3 புள்ளிகள்)

4 (I) சர்வதேச உறவுகளின் பிரதான வகைகள் **இரண்டும்** எவை? (2 புள்ளிகள்)

(II) சர்வதேச உறவுகளின் நோக்கங்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(III) (A) சர்வதேச உறவுகள் இலங்கை மீது செல்வாக்குச் செலுத்தும் துறைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(B) மேலே (A) வினாவில் குறிப்பிட்ட துறைகளுள் **ஒன்றினை** விளக்குக. (3 புள்ளிகள்)

5 (I) அரசின் மூலக்கூறுகளுள் **இரண்டினைக்** குறிப்பிடுக? (2 புள்ளிகள்)

(II) ஜனநாயக ஆட்சிமுறையொன்றின் வெற்றிக்கு எதிர்க்கட்சிகள் ஆற்ற வேண்டிய கடமைகளும் பொறுப்புக்களும் **மூன்றினைக்** குறிப்பிடுக? (3 புள்ளிகள்)

(III) (A) அரசின் பிரசைகள் மீதான பொறுப்புக்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(B) மேலே (A) வினாவில் குறிப்பிட்ட பொறுப்புக்களுள் **ஒன்றினை** விளக்குக. (3 புள்ளிகள்)

6 I) மனிதன் சூழலிலிருந்து பெற்றுக்கொள்ளும் வாழ்க்கைக்கு உதவும் சேவைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக? (2 புள்ளிகள்)

II) காலநிலை மாற்றத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக? (3 புள்ளிகள்)

III) (A) சூழல் தொடர்பான பிரசைகளின் பொறுப்புக்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக? (2 புள்ளிகள்)

(B) மேலே (A) வினாவில் குறிப்பிட்ட பொறுப்புக்களுள் **ஒன்றினை** விளக்குக. (3 புள்ளிகள்)

7 (I) உற்பத்தி தொடர்பாகப் பயன்படுத்தக்கூடிய நுட்பங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(II) உலகமயமாதல் காரணமாக இலங்கை பெற்றுள்ள நன்மைகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(III) (A) நிலையான அபிவிருத்தியின் போது கவனத்தில் கொள்ள வேண்டிய காரணிகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(B) மேலே (A) வினாவில் குறிப்பிட்ட காரணிகளுள் **ஒன்றினை** விளக்குக. (3 புள்ளிகள்)